සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ඉස්ලාම් I
இஸ்லாம் I
Islam I

**44 T I**

පැය දෙකයි
**இரண்டு மணித்தியாலம்**
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** நபித் தோழர்கள் முதலில் ஹிஜ்ரத் சென்ற இடம்
(1) தாயிப் (2) ஹபஷா (3) குபா (4) ஷாம் (5) யத்ரிப்

**2.** ‘காப்பதுன் லிந்நாஸ்’ என்பதன் கருத்து யாது?
(1) முழு மனித சமுதாயத்துக்கும் உரியவர்
(2) இறுதித் தூதர்
(3) நம்பிக்கைக்குரியவர்
(4) உண்மையாளர்
(5) இறுதி நாளில் உம்மத்துக்காக மன்றாடுபவர்

**3.** அல்லாஹ்வின் திருநாமங்களில் ‘படைப்பாளன்’ என்பதைக் குறிக்கும் சொல்
(1) அர்ரஹ்மான் (2) அர்ரஸ்ஸாக்
(3) அல் காலிக் (4) அல் குத்தூஸ்
(5) அஸ்ஸலாம்

**4.** அல்லாஹ்விடமிருந்து நபிமார்களுக்கு வழங்கப்பட்ட ரிஸாலத்தில் உள்ளடங்கியிருக்கும் பிரதானமான நான்கு விடயங்கள்
(1) அகீதா, இபாதத், ஷரீஅத், ஸிபாத்
(2) அகீதா, இபாதத், ஷரீஅத், அக்லாக்
(3) இபாதத், அகீதா, ஸிபாத், அக்லாக்
(4) ஷரீஅத், இபாதத், நுபுவ்வத், ஹிதாயத்
(5) அகீதா, ஹிதாயத், இபாதத், அக்லாக்

**5.** மறுமை நாளில் காணப்படும் ‘மகாமுன் மஹ்மூத்’ என்பது
(1) ஷபாஅத் செய்வதற்காக மக்களை நபி (ஸல்) அழைத்துச் செல்லும் இடம்
(2) மக்கள் குழுமியிருக்கும் இடம்
(3) உயிரினங்கள் உயிர் பெற்றெழும் இடம்
(4) மக்களைச் சூழ்ந்து மலக்குகள் அணி வகுத்திருக்கும் இடம்
(5) மறுமை நாளில் முஸ்லிம்கள் நீர் அருந்தும் இடம்

**6.** பிரபலமான ஸிஹாஹுஸ் ஸித்தா கிரந்தங்களைத் தொகுத்த அறிஞர்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி யாது?
(1) புகாரி, முஸ்லிம், நஸாஈ, இப்னு ஹஜர்
(2) நவவி, நஸாஈ, ஸுயூத்தி, திர்மிதி
(3) அபூதாவூத், ஸுயூத்தி, திர்மிதி, இப்னுல் கையூம்
(4) புகாரி, முஸ்லிம், கஸ்ஸாலி, அபூதாவூத்
(5) புகாரி, முஸ்லிம், திர்மிதி, அபூதாவூத்

7. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - பலஸ்தீனில் பிறந்தவர்.
B - பிக்ஹுல் அக்பர் நூலின் ஆசிரியர்.
C - 'ஆலிமுல் குறைஷ்' என்ற சிறப்புப் பெயருக்குரியவர்.
D - 'உஸூலுல் பிக்ஹ்' கலையின் முன்னோடியாவார்.
E - இஸ்திஹ்ஸானை அதிகம் பயன்படுத்தியவர்.
F - ஹனபி மத்ஹபின் ஸ்தாபகர்.
மேலுள்ளவற்றுள் இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களுடன் தொடர்புடைய கூற்றுக்களை மட்டும் கொண்ட தொகுதி யாது?
(1) A, B, C (2) A, C, D (3) B, C, F (4) C, D, E (5) D, E, F

8. பின்வருவனவற்றுள் குத்பா இடம்பெறாத தொழுகை
(1) ஜும்ஆ (2) இஸ்திஸ்கா (3) ஈதைன் (4) ஜனாஸா (5) குஸூபைன்

9. முஸ்லிம்களுடன் ஹுதைபியா உடன்படிக்கையில் ஈடுபட்ட பிரிவினர்
(1) அவ்ஸ் கோத்திரத்தார் (2) குறைஷிக் கோத்திரத்தார்
(3) கஸ்ரஜ் கோத்திரத்தார் (4) அஹ்லுல் கிதாப்கள்
(5) தாயிப்வாசிகள்

10. இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானோர் பின்பற்றும் மத்ஹப்
(1) மாலிகி (2) ஜஃபரி (3) ஹனபி (4) ஹம்பலி (5) ஷாபிஈ

11. "ஒரு முஸ்லிம் ஒரு மரத்தை அல்லது ஒரு பயிரை நாட்டி அதிலிருந்து ஒரு பறவை அல்லது ஒரு மிருகம் அல்லது ஒரு மனிதன் பயன்பெறும் காலமெல்லாம் அவனுக்கு அது ஸதகாவாக அமையும்" என்ற ஹதீஸ் பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது?
(1) கிலாபத் (2) வஸிய்யத் (3) இமாரத்
(4) நஸீஹத் (5) அமானத்

12. 'மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி' என்ற கருத்தில் நோக்கப்படும் இஜ்மாஉ யாது?
(1) இஜ்மாஉ இஜ்திஹாதி (2) இஜ்மாஉ முரக்கப் (3) இஜ்மாஉ நக்லி
(4) இஜ்மாஉ ஸுகூதி (5) இஜ்மாஉ அக்ஸரிய்யா

13. "மறுமையில் முஃமினின் மீஸானில் நல்லொழுக்கத்தை விடவும் எடை கூடிய இன்னொன்று இருக்க முடியாது" என்பது
(1) அல்-குர்ஆனிய வசனம் (2) நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்
(3) ஓர் இமாமின் கூற்று (4) ஒரு ஸஹாபியின் கருத்து
(5) ஒரு முதுமொழி

14. விவாகரத்துப் பெற்ற பெண்ணை மீளவும் மனைவியாக ஆக்கிக்கொள்வதற்கு ஏதுவாக இஸ்லாம் அனுமதித்துள்ள விவாகரத்து முறை
(1) தலாக் பாயின் (2) ஈலாஉ (3) லிஆன் (4) தலாக் ரஜ்ஈ (5) பஸ்கு

15. இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அறிஞர் சித்திலெப்பை பிரசுரித்த பத்திரிகையின் பெயர் யாது?
(1) முஸ்லிம் நேசன் (2) புதினாலங்காரி (3) அஸ்றாருல் ஆலம்
(4) முஸ்லிம் பாதுகாவலன் (5) அஸ்ஸவாப்

16. பின்வருவனவற்றுள் பல மதங்களின் இருப்பை இஸ்லாம் ஏற்றுக்கொள்கிறது என்பதை மிகச் சரியாக விளக்கும் அல்-குர்ஆன் வசனம் எது?
(1) "உலகிலுள்ள அனைத்து மனிதர்களும் கண்ணியமானவர்கள். இந்த கண்ணியம் அல்லாஹ்வால் மனிதனுக்கு வழங்கப்பட்டது."
(2) "மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது. ஏனெனில் வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது."
(3) "மக்களே! நாம் உங்களை நிச்சயமாக ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம்."
(4) "உமது இரட்சகன் நாடியிருந்தால், பூமியிலுள்ள அனைவரும் ஈமான் கொண்டிருப்பர். அவ்வாறு உமது இரட்சகன் விரும்பவில்லை."
(5) "வானங்கள் பூமியின் படைப்பும் அமைப்பும் உங்களது மொழிகளும் நிறங்களும் வித்தியாசமாக இருப்பதும் அவனைக் காட்டும் அத்தாட்சிகளைச் சேர்ந்தவையாகும்."

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

17. 'அஹ்லுஸ்ஸுபைத்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுவோர்
   (1) நபி (ஸல்) அவர்களுடன் ஹிஜ்ரத் சென்றவர்கள்
   (2) நபி (ஸல்) அவர்களை நேரில் சந்தித்த முஸ்லிம்கள்
   (3) ஹிஜ்ரி முதல் அரை நூற்றாண்டில் வாழ்ந்தோர்
   (4) நபி (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்தோர்
   (5) நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினரும் மனைவிமார்களும்

18. தர்தீப் திலாவத், தர்தீப் நுஸூல் என்பன குறிப்பன முறையே
   (1) அல்-குர்ஆன் அருளப்பட்ட முறை, ஓதப்பட்ட முறை
   (2) அல்-குர்ஆன் ஓதப்பட்ட முறை, அருளப்பட்ட முறை
   (3) அல்-குர்ஆன் அருளப்பட்ட முறை, எழுதப்பட்ட முறை
   (4) அல்-குர்ஆன் தொகுக்கப்பட்ட முறை, ஓதப்பட்ட முறை
   (5) அல்-குர்ஆன் ஒழுங்குபடுத்தப்பட்ட முறை, ஓதப்பட்ட முறை

19. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றோடு தொடர்புடைய முக்கிய தகவல்களைத் தரும் நூல்களை மட்டும் கொண்ட தெரிவு யாது?
   (1) புதூஹுல் புல்தான், அர்ரஹீகுல் மக்தூம்
   (2) கிதாபுல் உம்மு, அஹ்காமுஸ் ஸுல்தானியா
   (3) முகத்திமா இப்னு கல்தூன், கிதாபு தபகாத் அல் கபீர்
   (4) தாரீஹுல் கபீர், தாரீஹுர் ருஸுல் வல்முலூக்
   (5) அஜாஇபுல் ஹிந்தி, புதூஹுல் புல்தான்

20. சூரத்துல் பகராவை ஓதியதன் பின்னர் கவிதை புனைவதைக் கைவிட்ட கவிஞர் யார்?
   (1) இம்ரஉல் கைஸ்
   (2) உத்பா பின் ஆமிர்
   (3) வலீத் பின் முகீரா
   (4) அல் முதனப்பி
   (5) அல் கன்ஸா

21. பின்வருவனவற்றுள் பிரதானமாக எதன் / எவற்றின் அடிப்படையில் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதா கட்டியெழுப்பப்பட்டுள்ளது?
   (1) புலன்களும் பகுத்தறிவும்
   (2) இறைவழிகாட்டல்
   (3) மூடநம்பிக்கைகள் கலந்த இறைவழிகாட்டல்
   (4) கனவுகளும் கற்பனைகளும்
   (5) மனித உணர்வுகளும் வழிகாட்டல்களும்

22. 'ஸஹீபா ஸாதிகா' எனப்பட்ட ஹதீஸ் திரட்டு யாரால் எழுதப்பட்டது?
   (1) அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி)
   (2) அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் (ரழி)
   (3) அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)
   (4) அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி)
   (5) அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி)

23. அபூ அஸ்வத் அத்துவலி அல்-குர்ஆன் வசனங்களுக்கு உயிர்க்குறிகளையிட்ட நிகழ்வு எந்த கலீபாவின் காலத்தில் இடம்பெற்றது?
   (1) அபூபக்கர் (ரழி)
   (2) உமர் (ரழி)
   (3) உஸ்மான் (ரழி)
   (4) அலி (ரழி)
   (5) உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்)

24. இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களின் மாணவர்களுள் ஒருவர்
   (1) முஸ்னி
   (2) அபுல் காசிம்
   (3) அஷ்ஷைபானி
   (4) புவைதி
   (5) இப்னு தைமியா

[பக். 4 ஐப் பார்க்க

25. "அல்-குர்ஆன் படைக்கப்பட்டது" எனக் கூறும் குழுவினர்
(1) மு..தஸிலாக்கள் (2) முர்ஜிஆக்கள்
(3) கவாரிஜ்கள் (4) ஷீஆக்கள்
(5) ஜபரிய்யாக்கள்

26. பின்வருவனவற்றுள் கண்டி இராச்சியத்தில் முஸ்லிம்கள் அரசியலில் பெற்றிருந்த செல்வாக்கிற்குச் சான்றாக அமையும் கூற்று யாது?
(1) கி. பி. 1762 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த ஆங்கிலேய தூதுவரான ஜோன் பைபஸ் என்பவரை வரவேற்று, அழைத்து வர உதுமான் லெப்பை என்பவர் அக்கால மன்னனால் அனுப்பிவைக்கப்பட்டமை
(2) மாயாதுன்னை மன்னனின் (1521 - 1581) ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் போர்த்துக்கேயருக்கு எதிராக அம்மன்னனின் இராணுவத்தில் இணைந்து போராடியமை
(3) விஜயபாகு மன்னனின் (1055 - 1110) ஆட்சிக் காலத்தில் பெரியதம்பி மரிக்கார் என அழைக்கப்பட்ட ஒரு முஸ்லிம், வணிகத்துறை தொடர்பான இணைப்பாளராகச் செயற்பட்டமை
(4) மகா பராக்கிரமபாகு மன்னனின் (1153 - 1186) ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் 'அந்தரங்கதுர' எனும் வணிகத்துறை அபிவிருத்திக்கான மேல் சபையில் அங்கத்துவம் பெற்றிருந்தமை
(5) கி. பி. 1270 ஆம் ஆண்டில் தம்பதெனியவில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கி, முதலாம் புவனேகபாகு யாப்பகூவவை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்வதற்கு முஸ்லிம் தளபதி தாஹோர் ஒத்துழைப்பு நல்கியமை

27. அல்-குர்ஆன் குறிப்பிடுவதன் படி ரமழான் நோன்பின் மூலம் எதிர்பார்க்கப்படும் பிரதான நன்மை யாது?
(1) உடல் ஆரோக்கியம் ஏற்படுதல்
(2) ஏழைகளின் பசியை உணர்தல்
(3) பாவச் செயல்களிலிருந்து பாதுகாப்புப் பெற வழிசெய்தல்
(4) விழித்திருந்து வணங்குவதைத் தூண்டுதல்
(5) இறையச்சம் ஏற்படுதல்

28. மரணித்த ஒருவரின் சொத்துக்கள் மூலம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - ஜனாஸாவுக்குரிய செலவினங்கள்
B - வஸிய்யத்
C - மரணித்தவரின் கடன்கள்
D - வாரிசுகளுக்கிடையில் சொத்தைப் பங்கிடுதல்

மேலுள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டிய சரியான ஒழுங்குமுறையைக் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, C, D (2) A, C, B, D (3) B, A, C, D (4) C, A, B, D (5) D, A, B, C

29. அபூபக்கர் (ரழி) அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கை **அல்லாதது**
(1) மஜ்லிஸுஷ் ஷூராவை ஸ்தாபித்தமை
(2) அல்-குர்ஆனை ஒன்றுதிரட்டியமை
(3) போலி நபிமார்களுக்கெதிராகப் போராடியமை
(4) ஸகாத் கொடுக்க மறுத்தோருக்கு எதிராகப் போராடியமை
(5) உஸாமா (ரழி) தலைமையில் படையொன்றை சிரியாவுக்கு அனுப்பியமை

30. முஸ்லிம் விவசாயி ஒருவர் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு 3000 கிலோகிராம் நெல்லை அறுவடையாகப் பெறுகின்றார். அவரது வயலுக்கான நீர்ப்பாசனத்தை அரசாங்கம் வழங்குகின்றது எனில், அவர் அறுவடையின் போது எத்தனை கிலோகிராம் நெல்லை ஸகாதாக வழங்க வேண்டும்?
(1) 150 (2) 200 (3) 250 (4) 300 (5) 350

31. மற்றொருவரில் பொறாமை ஏற்படுவதனைத் தவிர்த்துக்கொள்ள நபி (ஸல்) அவர்கள் எடுத்துக்காட்டிய வழிமுறை யாது?
(1) பொறாமை உலக இன்பங்களுக்காக அலைந்து திரியக்கூடிய தன்மையை மனிதனில் ஏற்படுத்துகிறது என எண்ணுதல்
(2) சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு இறைவனே காரணம் என்ற கருத்தை உள்ளத்தில் ஆழப்பதித்தல்
(3) பொறாமையினால் தமக்கு ஏற்படும் தீங்கிலிருந்து இரட்சகனிடம் பாதுகாப்புத் தேடல்
(4) எம்மைவிட தாழ்ந்தோரை நோக்கி அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்காகப் பெருமிதம் அடைதல்
(5) செல்வந்தனுக்கு அல்லது அறிவாளிக்குக் கொடுக்கப்பட்டது போன்று தனக்கும் கிடைத்தால் அதன் மூலம் தானும் நன்மை செய்யலாம் என எண்ணுதல்

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

32. பின்வருவனவற்றுள் இஸ்லாமிய கொடுக்கல் வாங்கலோடு தொடர்புடைய **பிழையான** நடைமுறை யாது?
(1) இஸ்லாமிய வங்கி ஒன்றிலிருந்து ஒரு முஸ்லிம் தன் தேவைக்காக கடன் ஒன்றைப் பெறுகின்றபோது, அதற்காக மற்றொரு முஸ்லிம் பிணை நிற்றல் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.
(2) இரவலாக பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உபகரணத்திலிருந்து பயனடைந்து கொண்டமைக்கு குறித்தவொரு பணப்பெறுமதியை பதிலீடாகச் செலுத்துவது பொருத்தமான செயலாகும்.
(3) கடன் பெற்றவர் அக்கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை அடமானமாக வைக்கப்பட்ட பொருள் அல்லது சொத்திலிருந்து பயனடைந்து கொள்வது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.
(4) விற்பவருக்கும் வாங்குபவருக்கும் இடையில் இணைப்பாளராகச் செயற்படும் தரகர் ஒருவர் அச்சேவைக்காக நியாயமான ஒரு கூலியைப் பெற்றுக் கொள்வதில் தவறேதும் கிடையாது.
(5) நோய், விபத்து காரணமாக ஏதேனுமொரு விடயத்துக்கு தன்னால் சமூகமளிக்க முடியாத பட்சத்தில் அதற்காக தன் சார்பாக மற்றொருவரை பொறுப்பாளியாக்குதல் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

33. சமூகப் பணிகள் சார்ந்த பொறுப்புக்களுக்கு ஒரு முஸ்லிம் நியமிக்கப்படுவது தொடர்பான சரியான நடைமுறை யாது?
(1) அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானவராக இருப்பதோடு சிறந்த அறிவு, ஆளுமை, பொறுப்புணர்ச்சி, நற்குணம் மற்றும் குடிமக்களுடன் பரிவு கொண்டிருப்பவர் பொறுப்புகளுக்கு நியமிக்கப்படல்
(2) தம் கூட்டத்தினர் மீது அன்பும் இரக்கமும் கொண்டிருக்கும் ஒருவர் அக்கூட்டத்தினருக்குத் தலைவராக நியமிக்கப்படுதல்
(3) இறுதித் தீர்ப்பு நாளில் தம் கண்ணியத்தை இழந்து அவமானத்திற்குட்படுவார் என்பதனால் பலவீனமானவர் உரிய பதவிக்கு நியமிக்கப்படாதிருத்தல்
(4) அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானவரைத் தவிர்த்து மற்றொருவரை நியமிக்காதிருத்தல்
(5) தன் சேவைக் காலத்தில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுபவர் நியமிக்கப்படுதல்

34. பின்வரும் கூற்றுகளை அவதானிக்குக.
A - இறைவன் படைத்துள்ள இயற்கை வளங்களோடு மனித முயற்சி ஒன்றிணையும்போது முடிவுப் பொருட்கள் உற்பத்தியாகின்றன.
B - உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் பொருட்களை நுகர்கின்ற உரிமையை தான் பிறக்கும் போதே பெற்றுக்கொள்கிறான்.
C - ஆடம்பரம், பெருமை, பகட்டு, கௌரவம் போன்றவை, பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவின்போது தவிர்க்கப்பட வேண்டிய அம்சங்களாகும்.
D - பொருட்கள், சேவைகள் என்பவற்றின் நுகர்வு நிபந்தனைகளுக்கு உட்பட்டுள்ளதோடு, அவை மீறப்படும் போது இறை தண்டனைக்கு ஆளாக நேரிடும்.
E - மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய போதைப்பொருள் போன்றவற்றை உற்பத்தி செய்வதும் வியாபாரம் செய்வதும் தடை செய்யப்படத்தக்க விதத்தில் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

மேலுள்ளவற்றுள் நுகர்வு பற்றிய இஸ்லாமியக் கோட்பாட்டை விளக்கும் கூற்றுக்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) A, B, C (2) A, B, E (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

35. இஸ்லாமிய திருமணம் தொடர்பான பின்வரும் கூற்றுகளை அவதானிக்குக.
A - ஓர் ஆண் ஏக காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை குறித்த காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தன் மனைவிகளாக ஏற்றுக்கொள்ளல்
B - நபி (ஸல்) அவர்களுக்கு முன்னர் தோன்றிய இப்ராஹீம் (அலை), சுலைமான் (அலை) போன்றோர் பலதார மணம் புரிந்து வாழ்ந்த முறைகளை முழுமையாகப் பின்பற்றுதல்
C - ஒரு பெண்ணின் உடற் தேவைகளை நிறைவுசெய்யும் சக்தி, அவளை முழுமையாகப் பராமரிக்கும் பொருளாதார வசதி என்பன காணப்படுகின்றபோது நான்கிற்கு மேற்படாத பெண்களை திருமணம் செய்து கொள்ளல்
D - மனைவியரிடையே ஒரு கணவன் உளரீதியான அன்பை நீதமாக பகிர்ந்தளிப்பது சாத்தியமான ஒன்றல்ல என்பதை மனைவியர் புரிந்து கொள்ளல்
E - சகல மனைவியரையும் ஒரே விதமாகப் பராமரிக்க முடியாத ஆண் ஒரு பெண்ணை மாத்திரம் திருமணம் செய்து கொள்ளல்

மேலுள்ளவற்றுள் பலதார மணம் தொடர்பான சரியான இஸ்லாமியக் கூற்றுக்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

[பக். 6 ஐப் பார்க்க

36. இஸ்லாத்தின் அறிமுகம் தொடர்பான பின்வரும் கூற்றுகளை அவதானிக்குக.

A - கி.பி. 610 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய கரையோரங்களில் வலிமைமிக்க வணிகர்களாக அறேபியர் நிலைபெற்றிருந்தனர்.

B - நபியவர்களின் தூதுவராக சீனாவுக்குச் சென்ற வஹப் இப்னு அபீ ஹப்ஸா (ரழி) இலங்கைக்கும் வருகை தந்து, இலங்கை அரசனுக்கு இஸ்லாம் பற்றிய செய்திகளை வழங்கினார்.

C - இலங்கை மன்னன் மூன்றாம் அக்கபோதியினால் அறேபியாவுக்கு (மதீனா) அனுப்பப்பட்ட தூதுவரின் பணியாள் இலங்கைக்குத் திரும்பி இஸ்லாம் பற்றிய செய்திகளை வழங்கினார்.

D - ஹஜ்ஜாஜ் பின் யூசுபின் கொடுமைகளுக்கு அஞ்சிய ஹாஷிம் கிளையினரில் சிலர் அறேபியாவைத் துறந்து தென்னிந்தியக் கரையோரங்களிலும் இலங்கையின் வட மற்றும் தென் கரையோரங்களிலும் குடியேறினர்.

E - பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்தை ஆட்சி செய்த காலப்பகுதியில் தலைநகரில் சில குறிப்பிட்ட பகுதிகளை அறேபிய வணிகர்களுக்காக ஒதுக்கி வைத்திருந்தான்.

மேலுள்ளவற்றுள் இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகம் தொடர்பாக விளக்கும் கருத்துக்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

37. பின்வரும் கடமைகளை அவதானிக்குக.

A - ஐங்காலத் தொழுகை

B - பாதையைச் செப்பனிடுதல்

C - ஊதியத்துக்கேற்ப கடமை புரிதல்

D - பெற்றோருக்கு உபகாரம் செய்தல்

E - பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணித்தல்

F - கணவன் தனது குடும்பத்துக்காகச் செலவிடுதல்

மேலுள்ளவற்றுள் 'பர்ளு ஐன்' சார்ந்த கடமைகளை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C, D (2) A, B, C, F (3) A, C, D, F (4) B, D, E, F (5) C, D, E, F

38. பின்வருவனவற்றை அவதானிக்குக.

A - எந்த மாதத்திலும் நிறைவேற்றலாம்

B - தவாபு செய்தல்

C - ஸஃயு செய்தல்

D - குறிப்பிட்ட நாட்களில் நிறைவு செய்தல்

E - அறபாவில் தரித்தல்

F - மஸ்ஜிதுந் நபவியைத் தரிசித்தல்

மேலுள்ளவற்றுள் ஹஜ்ஜுடன் தொடர்புடைய கடமைகளை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C, D (2) A, B, E, F (3) A, D, E, F (4) B, C, D, E (5) C, D, E, F

39. பின்வரும் கூற்றுகளை அவதானிக்குக.

A - கணவன் மனைவியரிடையே மனநிம்மதி, அன்பு, பாசம் என்பவற்றினூடாக பரஸ்பரம் உதவிக்கொள்ளல்

B - விபச்சாரம், ஓரினச் சேர்க்கை, சுய இன்பம் காணல் போன்ற தகாத பழக்கங்களைத் தவிர்த்தல்

C - வாலிபர்களில் உடல் ஆரோக்கியமும் பொருளாதார வசதியும் உடையோர் திருமணம் செய்து கொள்ளல்

D - கணவன், மனைவியரிடையே பொறுப்புக்கள் பகிரப்படுவதன் மூலம் ஆரோக்கியமான குடும்பம், சமூகம் உருவாக வழிசெய்தல்

E - மனித வாழ்வின் அடிப்படையாக இஸ்லாத்தில் திருமணம் கருதப்படுதல்

மேலுள்ளவற்றுள் இஸ்லாமிய திருமணத்தின் நோக்கங்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) B, C, D (5) C, D, E

7 ஆம் பக்கம் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**40.** கணவனை இழந்த ஒரு கர்ப்பிணிப் பெண் இத்தா அனுஷ்டிக்க வேண்டிய கால அளவு யாது?
(1) ஒரு மாத காலம்
(2) மூன்று மாதவிடாய்க் காலம்
(3) மூன்று மாத காலம்
(4) நான்கு மாதங்களும் பத்து நாட்களும்
(5) பிரசவம் நிகழும் காலம் வரை

**41.** ஹதீஸ்களில் மிக உயர்ந்த தரத்தில் கணிக்கப்படுவது
(1) முதவாதிர் (2) ஸஹீஹ் (3) ஹஸன் (4) மவ்ழூஉ (5) மர்பூஉ

● **42** முதல் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் X. Y எனும் நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. Y நிரலில் உள்ளவை X நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒருவகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. எனினும் அவை ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அதன்படி X நிரலுக்கேற்ப Y நிரலிலுள்ள விடயங்களைப் பொருத்தமான வகையில் தொடர்புபடுத்தும் போது ஒழுங்குமுறையில் அமையும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

**42.**

| X | Y |
|---|---|
| (i) தௌஹீத் அஸ்மா வஸ்ஸிபாத் | A - ஹதீஸ்களை ஒன்றுதிரட்டல் |
| (ii) ஸகாத் பெறத் தகுதியற்றோர் | B - அஹ்லுர் ர.்.யி |
| (iii) ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரீ (ரஹ்) | C - உயிரைப் பாதுகாத்தல் |
| (iv) ஹனபி மத்ஹப் | D - அல்லாஹ்வுக்கு ஒப்பாக எதுவுமே இல்லை |
| (v) ழரூரிய்யாத் | E - நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினர் |

(1) A, B, C, D, E (2) B, C, D, E, A (3) C, D, E, A, B
(4) D, E, A, B, C (5) E, A, B, C, D

**43.**

| X | Y |
|---|---|
| (i) தக்வா | A - அல்லாஹ்விடம் தன் காரியங்களை முழுமையாக ஒப்படைத்தல் |
| (ii) தவக்குல் | B - உலகப் பற்றுக்கும் துறவறத்துக்கும் இடையில் சமநிலை பேணல் |
| (iii) ரிழா | C - இறைவனுக்கு அஞ்சிய வகையில் மனித நடத்தை அமைதல் |
| (iv) ஸுஹ்த் | D - பாவம் என சந்தேகிக்கும் விடயங்களைக் கைவிடல் |
| (v) வர.்.. | E - இறைவனது தீர்ப்பிலே திருப்தி அடைதல் |

(1) A, B, C, D, E (2) B, C, D, E, A (3) C, A, E, B, D
(4) D, A, E, B, C (5) E, A, B, C, D

**44.**

| X | Y |
|---|---|
| (i) சாதாரண குற்றங்கள் | A - ஜராஇமுல் ஹுதூத் |
| (ii) பழிவாங்கல் மற்றும் நட்டஈடு பெறத்தக்க குற்றங்கள் | B - ஸரிகா |
| (iii) திருட்டுடன் தொடர்புடைய குற்றங்கள் | C - த.்.ஸீர் |
| (iv) போதைப்பொருள் பாவனையுடன் தொடர்புடைய குற்றங்கள் | D - ஜராஇமுல் கிஸாஸ் வத்தியா |
| (v) தண்டனைகள் வரையறுக்கப்பட்ட குற்றங்கள் | E - ஷுர்புல் .்.கம்ர் |

(1) A, B, C, D, E (2) B, C, D, E, A (3) C, D, B, E, A
(4) D, E, A, B, C (5) E, A, B, C, D

[பக். 8 ஐப் பார்க்க

45.

| X | Y |
|---|---|
| (i) மூன்றாம் ஸ்தானத்தில் வாரிசுரிமைப் பங்குகளைப் பெறுவோர் | A - அஸபா |
| (ii) அல்-குர்ஆன், சுன்னாவில் வராஸத் பங்குகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளோர் | B - ஹஜ்பு நுக்ஸான் |
| (iii) வாரிசுச் சொத்தில் முக்கியமான பங்குகள் பகிரப்பட்ட பின்னர் மீதமுள்ளவற்றைப் பெறுவோர் | C - ஹஜ்பு ஹிர்மான் |
| (iv) சிலருக்குக் கிடைக்கவிருந்த வாரிசுரிமைப் பங்குகள் குறைந்து போதல் | D - துல்-அர்ஹாம் |
| (v) சிலருக்குக் கிடைக்கவிருந்த வாரிசுரிமைப் பங்குகள் முற்றாக இல்லாமல் போதல் | E - அஸ்ஹாபுல் புருள் |

(1) A, B, C, D, E
(2) B, C, D, E, A
(3) C, D, E, A, B
(4) D, E, A, B, C
(5) E, A, B, C, D

- **46** தொடக்கம் **50** வரையிலுள்ள வினாக்களில் இரண்டு வகையிலான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக்கூற்றுகளுக்குப் பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.

| இல. | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 46. | நபி (ஸல்) அவர்கள் தமக்கு வஹியாக அறிவிக்கப்படாத விடயங்களில் தனது இஜ்திஹாதைப் பயன்படுத்தித் தீர்ப்பளித்துள்ளார்கள். | முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள் யெமன் நாட்டுக்கு ஆளுநராக அனுப்பப்பட்டபோது அவர் தனது இஜ்திஹாதின் அடிப்படையில் செயற்பட அனுமதிக்கப்பட்டது. |
| 47. | அனைத்து மக்களுக்குமான போதியளவு உணவு, ஆடைகள், வாழ்வதற்கான வீடு என்பவை நிறைவு செய்யப்பட வேண்டும் என்பது இஸ்லாத்தில் மிக முக்கியமானதாகும். | ஸதகா, ஹிபத், ஹதியா, அகீகா, உழ்ஹிய்யா போன்றவை இஸ்லாம் குறிப்பிடும் செல்வப் பங்கீட்டு அம்சங்களுள் சிலவாகும். |
| 48. | இஸ்லாம் வறுமையை ஆதரித்து, அது ஓர் இறை அருள் என்றும் அது நீக்கப்படக்கூடாதது என்றும் கருதுகிறது. | நபி (ஸல்) அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் வறுமையோடு வாழ்ந்து, மற்றவர்களையும் வறுமையோடு வாழும்படி ஊக்குவித்தார்கள். |
| 49. | நபி (ஸல்) அவர்கள் தன் குடும்பத்திற்காக ஓராண்டுக்குத் தேவையான உணவுப் பண்டங்களைச் சேமித்து வைத்திருந்ததாக உமர் (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். | ஒரு முஸ்லிம் தன் மரணத்தின் பின் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக சொத்துக்கள் எதனையும் விட்டுச் செல்வதை இஸ்லாம் ஊக்கப்படுத்தவில்லை. |
| 50. | கவர்ச்சிகரமான மாயைகளைக் கற்பிதம் செய்து, உற்பத்திகளைச் சந்தைப்படுத்தி, அதிக இலாபம் ஈட்டும் வணிகம் இஸ்லாத்தில் வரவேற்கத்தக்க முயற்சியாகக் கருதப்படுகிறது. | அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்ற வியாபாரியை 'அத்தாஜிருஸ் ஸதூக்' என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்கள். |

***

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2025

විෂය අංකය / பாட இலக்கம்: **44**

විෂයය / பாடம்: **இஸ்லாம்**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
## I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 2 | 31. | 4 | 41. | 1 |
| 02. | 1 | 12. | 4 | 22. | 1/5 | 32. | 3 | 42. | 4 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 4 | 33. | 1 | 43. | 3 |
| 04. | 2 | 14. | 4 | 24. | 3 | 34. | 3 | 44. | 3 |
| 05. | 1 | 15. | 1 | 25. | 1 | 35. | 5 | 45. | 4 |
| 06. | 5 | 16. | 4 | 26. | 1 | 36. | 3 | 46. | 5 |
| 07. | 2 | 17. | 5 | 27. | 5 | 37. | 3 | 47. | 1 |
| 08. | 4 | 18. | 2 | 28. | 2 | 38. | 4 | 48. | 4 |
| 09. | 2 | 19. | 5 | 29. | 1 | 39. | 2 | 49. | 3 |
| 10. | 5 | 20. | 3 | 30. | 4 | 40. | 5 | 50. | 2 |

✪ විශේෂ උපදෙස් / **விசேட அறிவுறுத்தல் :**

එක් පිළිතුරකට / **ஒரு சரியான விடைக்கு** 01 ලකුණු බැගින් / **புள்ளி வீதம்**

මුළු ලකුණු / **மொத்தப் புள்ளிகள்** 1 x 50 = 50

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

44 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

✳ பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) 'ஹுகூகுல் இபாத்' என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) உறவினர்கள், அயலவர்கள் ஆகியோருக்காக ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் **நான்கைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஜமாஅத்துத் தொழுகை ஏற்படுத்தும் சமூக ரீதியான பயன்கள் **மூன்றைச்** சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஸகாத் ஏன் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதனை நான்கு விடயங்களினூடாகத் தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

2. (i) உலூமுல் குர்ஆன் கலையில் முஹ்கம் மற்றும் முதஷாபிஹ் என்பனவற்றினால் கருதப்படுவன யாவை? (02 புள்ளிகள்)

(ii) ஓர் ஆண் தற்காலிகமாகத் திருமணம் செய்துகொள்ள **அனுமதிக்கப்படாதோர் நால்வரைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இஸ்லாத்தில் நன்மையை ஏவி, தீமையைத் தடுப்போர் பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் **மூன்றை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) 'வஹ்ததுல் வுஜூத்' என்பதனை வரையறுத்து, அதன் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

3. (i) இத்தாவின் நோக்கங்கள் **இரண்டு** தருக. (02 புள்ளிகள்)

(ii) மரணித்த ஒருவரின் சொத்து அதன் வாரிசுதாரர்களான ஆண், பெண்ணுக்கிடையில் சமமாகப் பகிரப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டைச்** சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) 'தஸவ்வுப்' என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, அதன் தோற்றப் பின்னணியை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஒரு முஸ்லிம் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது பேணவேண்டிய பண்பாட்டு விழுமியங்கள் **நான்கினை** விளக்குக. (08 புள்ளிகள்)

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ඉක්මනින්ම Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி II

4. (i) அல்-குர்ஆனைப் புரிந்துகொள்வதற்கு ஹதீஸ் துணைபுரியும் வழிமுறைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டை** உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

   (ii) தாபிஈன்கள் காலத்தில் ஹதீஸ்கள் நூலுருப்படுத்தப்பட்ட வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அதனால் முஸ்லிம் சமூகத்துக்குக் கிடைத்த அனுகூலங்கள் **நான்கினை** விளக்குக. (10 புள்ளிகள்)

5. (i) "ஷரீஆ மாறுபட்டிருந்த போதிலும் இஸ்லாம் என்றும் ஒரு நிலையான தீனாகவே காணப்படுகின்றது." விளக்குக. (10 புள்ளிகள்)

   (ii) கருத்து வேறுபாடுகளின்போது பேணவேண்டிய ஒழுக்கங்கள் **ஐந்தை** இஸ்லாமிய கண்ணோட்டத்தில் விளக்குக. (10 புள்ளிகள்)

6. (i) ஒரு முஸ்லிமின் வீட்டுச் சூழல் சிறந்து விளங்க இஸ்லாம் குறிப்பிடும் போதனைகள் **ஐந்தை** விளக்குக. (10 புள்ளிகள்)

   (ii) "குடும்ப வாழ்வில் கணவன், மனைவி எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் தீர்வுக்கு இஸ்லாம் சிறந்த ஒழுங்கு முறையொன்றை முன்வைத்துள்ளது." விளக்குக. (10 புள்ளிகள்)

7. (i) ஜாஹிலிய்யாக் கால சமூகத்தினரிடையே காணப்பட்ட தவறான நடத்தைகள் **ஐந்தைக்** குறிப்பிட்டு, அவற்றிலிருந்து அச்சமூகத்தை இஸ்லாம் மீட்டெடுத்த விதம் பற்றி ஆராய்க. (10 புள்ளிகள்)

   (ii) இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பம்சங்கள் **ஐந்தை** விளக்குக. (10 புள்ளிகள்)

8. பின்வரும் தலைப்புகள் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

   (i) இஜ்மாஉ ஸரீஹ் (05 புள்ளிகள்)

   (ii) இஸ்லாத்தில் உழைப்பின் முக்கியத்துவம் (05 புள்ளிகள்)

   (iii) இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பண்பாட்டுப் பங்களிப்புகள் (05 புள்ளிகள்)

   (iv) இஸ்லாம் மனிதனுக்கு வழங்கியுள்ள உயர் அந்தஸ்து (05 புள்ளிகள்)

* * *

பகுதி I

(i) **"ஹுகூகுல் இபாத்" என்பதை வரைவிலக்கணப்படுத்துக.**

- ஒரு மனிதன் தனக்கும், ஏனைய மனிதர்களுக்கும், பிற படைப்புகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகள் "ஹுகூகுல் இபாத்" எனப்படும்.

Short Answer – 1 mark

**(2 புள்ளிகள்)**

(ii) **உறவினர்கள், அயலவர்கள் ஆகியோருக்காக ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் நான்கைக் குறிப்பிடுக.**

உறவினர்கள், அயலவர்கள் ஆகியோருக்கு மனிதன் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இஸ்லாம் பின்வருமாறு விளக்கியுள்ளது.

- அன்பாக உறவாடுதல், பழகுதல்.
- தேவைகளின் போது உதவுதல்.
- மகிழ்ச்சியின்போது பாராட்டுதல்.
- துன்பத்தில் ஆறுதல் கூறுதல்.
- அவர்களது உரிமைகளை மதித்து நடத்தல்.

**(இவை போன்ற நான்கு கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 4 = 4 புள்ளிகள்)**

(iii) **ஜமாஅத்துத் தொழுகை ஏற்படுத்தும் சமூக ரீதியான பயன்கள் மூன்றைச் சுருக்கமாக விளக்குக.**

- சமூகக் கூட்டுறவு ஏற்படுதல்.
- ஒருவர் மற்றவருக்கு பரஸ்பரம் உதவும் மனநிலை ஏற்படுதல்.
- ஐக்கியம், சகோதரத்துவம், சமத்துவம் போன்ற உயர் பண்புகளை சமூகத்தில் வளர்த்தல்.
- சமூகத் தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படும் பண்பை வளர்த்தல்.
- சமூகப் பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு ஏற்படுதல்.
- சமூக அங்கத்தவர்களை நேரத்துக்கு இயங்கப் பழக்குதல்.

**(இவை போன்ற மூன்று விடயங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 3 x 2 = 6 புள்ளிகள்)**

(iv) **ஸகாத் ஏன் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதனை நான்கு விடயங்களினூடாகத் தெளிவுபடுத்துக.**

- சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சமூகக்கடமையாக ஸகாத் அமைந்துள்ளமை.
- ஸகாத்தின் உச்ச பயனை அடைய அது கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டிய தேவை ஏற்படுகின்றமை.
- ஸகாத்தோடு தொடர்புடைய அல்-குர்ஆன் போதனையில் ஸகாத்தை சேகரித்து விநியோகிப்போர் (ஆமிலூன்) எனும் சொல், கூட்டாக நிறைவேற்றுவதை வேண்டி நிற்கின்றமை.
- நபி (ஸல்) அவர்கள் ஸகாத்தை சேகரித்து விநியோகிக்கும் பணியை மேற்கொள்வதற்காக பிரதிநிதிகளை நியமித்து அனுப்பியமை.
- ஸகாத் சேகரிப்பு, களஞ்சியப்படுத்தல், கணக்கிடல், உரியவர்களுக்கு வழங்கல் என்பவற்றைக் கூட்டமைப்பின்றி சரியாக நிறைவேற்ற முடியாமை.
- தனியாக செல்வந்தர்கள் ஸகாத்தை வழங்கும் போது அதனைப் பெறுபவர்கள் செல்வந்தர்களின் கெடுபிடிகளுக்கு ஆளாகி, சுய கௌரவம் பாதிக்கப்பட முடியுமாக இருத்தல்.
- தனித்து நிறைவேற்றும் போது பங்கீட்டில் ஒழுங்கீனம் இடம்பெற வாய்ப்புள்ளமை.
- கூட்டாக நிறைவேற்றப்படும் போது பெறத் தகுதியான அனைத்து பிரிவினரும் பயனடைய முடிகின்றமை.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- ஸகாத் கடமையிலிருந்து செல்வந்தர் எவரும் நழுவி விடாமலிருக்க வழிவகுக்கின்றமை.
- வறுமை ஒழிப்புக்கான வேலைத்திட்டங்களை திட்டமிட்டு மேற்கொள்ள முடிகின்றமை.

**(இவை போன்ற 4 விடயங்களின் ஊடாக தெளிவுபடுத்தப்பட்டிருப்பின் 4 x 2 = 8 புள்ளிகள்)**
**(2 + 4 + 6 +8 = 20 புள்ளிகள்)**

**2. (i) உலூமுல் குர்ஆன் கலையில் முஹ்கம் மற்றும் முதஷாபிஹ் என்பனவற்றினால் கருதப்படுவன யாவை?**

- முஹ்கம் - முஹ்கம் என்பது அல்குர்ஆனில் காணப்படும் மிகத் தெளிவான கருத்துக்களைத் தரும் வசனங்களைக் குறிக்கும்.
- முதஷாபிஹ் - முதஷாபிஹ் என்பது அல்குர்ஆனில் பல கருத்துக்களைத் தரக்கூடிய, இலகுவாக புரிந்துகொள்ள முடியாத வசனங்களைக் குறிக்கிறது.

**(வரைவிலக்கணம் தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்)**

தெளிவான வசனம்
தெளிவற்ற வசனம் (1 mark)

**(ii) ஓர் ஆண் தற்காலிகமாகத் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படாதோர் நால்வரைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)**

- மனைவியின் சகோதரி (ஏக காலத்தில் இரு உடன் பிறந்த சகோதரிகளை மனைவியாகக் கொள்ளல்)
- மனைவியின் தந்தையின் சகோதரி (ஒரு பெண்ணையும் அவளது தந்தையின் சகோதரிகளையும் ஏக காலத்தில் மனைவியாகக் கொள்ளல்)
- மனைவியின் தாயின் சகோதரி (ஒரு பெண்ணையும் அவளது தாயின் சகோதரியையும் ஏக காலத்தில் மனைவியாகக் கொள்ளல்)
- வேறு ஒருவரின் மனைவி (திருமணம் முடித்த ஒரு பெண் ஒருவரின் மனைவியாக இருக்கும் வரை வேறொருவரைத் திருமணம் முடிக்கக் கூடாது)
- தன்னால் மூன்று முறை தலாக் சொல்லப்பட்ட பெண்
- முஷ்ரிக்கான பெண்
- விபசாரத்தில் ஈடுபடும் பெண்
- இத்தாவில் உள்ள பெண்
- இஹ்ராம் அணிந்த பெண்

**(இவற்றுள் நான்கு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 4 = 4 புள்ளிகள்)**

**(iii) இஸ்லாத்தில் நன்மையை ஏவி, தீமையைத் தடுப்போர் பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் மூன்றை விளக்குக. (06 புள்ளிகள்)**

- இஸ்லாத்தில் நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல் "அல்-அம்ரு பில் ம.'.ரூப் வந்நஹ்யு அனில் முன்கர்" என்று கூறப்படும்.
- இது மிக உயர்ந்த கடமை என்பதால் இதைச் செய்வோரிடம் சில தகைமைகளை இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. அவையாவன:
  - அல்-குர்ஆன், ஸுன்னா, ஷரீஅத் ஆகியவற்றில் அடிப்படையான அறிவு பெற்றிருத்தல்.
  - கோபம், அகம்பாவம், கிண்டல், அவமதிப்பு போன்றவற்றைத் தவிர்த்தல்.
  - மென்மையாகவும் மரியாதையுடனும் அறிவுறுத்தல்.
  - நேர்மை மற்றும் நிதானமாக நடத்தல்.
  - அல்லாஹ்வின் திருப்திக்காக மட்டுமே இதைச் செய்ய வேண்டும். புகழ் அல்லது பெருமையை நோக்காக கொள்ளக்கூடாது.
  - தாம் கூறும் நன்மைகளை தாமும் செயல்படுத்தி, தடுக்கும் தீமைகளைத் தவிர்ந்து முன்மாதிரியாக நடத்தல்.
  - ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான வழிமுறைகளைக் கையாளுதல்.
  - நன்மையை ஏவி தீமையைத் தடுப்பவர் எதிர்ப்பு, கேலிச்சொல், சோதனை ஆகியவற்றைச் சந்திக்க நேரிடும் போது பொறுமையுடன் சகித்துக்கொள்ளல்.

**(இவை போன்ற மூன்று தகைமைகள் விளக்கப்பட்டிருப்பின் 3 x 2 = 6 புள்ளிகள்)**

(iv) **"வஹ்ததுல் வுஜூத்" என்பதனை வரையறுத்து, அதன் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)**

- **மொழி ரீதியாக :** உள்ளவை அனைத்தும் ஒன்று
- **பரிபாஷையில் :** அல்லாஹ்வும் இயற்கையும் ஒன்று என்று வாதிடும் தத்துவ கொள்கையைக் குறிக்கும்.
- அல்லாஹ்வின் தோற்றமே இப்பிரபஞ்சம். தமக்கென்று சுய இருப்பில்லாத சடப்பொருட்களின் மொத்தமான வெளித்தோற்றம் அல்லாஹ்வின் இருப்பில் நிலை கொண்டுள்ளது.
- தஸவ்வுப் சிந்தனையினூடாக இது முஸ்லிம்கள் மத்தியிலும் இது செல்வாக்குப் பெற்றமை.
- சில சூபிகள் ஷரீஅத்துக்கு அப்பால் அல்லாஹ்வின் நெருக்கத்தை அடைய முயற்சித்தமையே இதற்கான காரணமாகும்.
- இச்சிந்தனையை முஸ்லிம் சமூகத்தில் அறிமுகப்படுத்தி வளர்த்தோராக, இப்னு அரபி, இப்னு பாரில், இப்னு ஸப்ஈன், தல்மஸானி போன்றோரை குறிப்பிடலாம்.
- புதூஹாதுல் மக்கி எனும் நூலை எழுதிய இப்னு அரபியே இச்சிந்தனையின் முன்னோடியாகக் கருதப்படுகிறார். ஹிஜ்ரி 7ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இவர் இச்சிந்தனையைப் பேச ஆரம்பித்தார்.
- இப்னு அரபியின் வஹ்ததுல் வுஜூத் சிந்தனையின் படி, படைப்பாளனுக்கும் படைப்புக்களுக்கும் இடையில் வேறுபாடுகள் எதுவும் கிடையாது. அல்லாஹ் அனைத்துப் படைப்புக்களையும் தன்னிலேயே உள்ளடக்கியுள்ளான்.

  "அனைத்தும் அவனாகிய நிலையில் அனைத்தையும் வெளிப்படுத்தும் அவன் தூய்மையானவன்"- இப்னு அரபி.
- சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடு வெறும் தர வேறுபாடே அன்றி வகை வேறுபாடல்ல.
- இப்னு அறபியின் சிந்தனைப் படி, மதங்களுக்கிடையில் கூட வேறுபாடு கிடையாது. அல்லாஹ்வை வணங்குபவனும், கற்களை வணங்குபவனும், சிலைகளை வணங்குபவனும் சமமானவர்களே. ஏனெனில் எல்லோரும் அல்லாஹ்வையே வணங்குகின்றனர். ஏனெனில், படைப்பினமாக வந்தவன் அவனே.

**(வரைவிலக்கணத்துக்கு 2 புள்ளிகளும் தோற்றம் வளர்ச்சி தொடர்பாக மூன்று கருத்துக்கள் விளக்கியிருப்பின் 6 புள்ளிகளுமாக மொத்தம் 2 + 6 = 8 புள்ளிகள்)**

**(2 + 4 + 6 +8 = 20 புள்ளிகள்)**

(i) **இத்தாவின் நோக்கங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)**

- இத்தா அனுஷ்டிப்பது ஓர் இறை கட்டளையாகும். அந்த இறைகட்டளையை ஏற்று நிறைவேற்றுவதன் மூலம் நற்கூலியை பெற்றுக் கொள்ளல்.
- முன்னாள் கணவன் மூலம் கருவுற்றிருக்கிறாளா என்பதை அறிதல்.
- கணவனை இழந்த பெண் துக்கம் அனுஷ்டிப்பதற்குரிய இஸ்லாமிய கால எல்லையை நிர்ணயம் செய்தல்.
- இறந்த கணவனது நடவடிக்கைகளை நினைவுகூர்ந்து, மனப்பூர்வமாக அவருக்காகப் பிரார்த்தனை புரிய உள்ள ஒரு சந்தர்ப்பமாக அமைதல்.
- மறுமணம் பற்றிய தீர்க்கமான ஒரு முடிவுக்கு வருவதற்கான சந்தர்ப்பமாக அமைதல்.
- தலாக் ரஜஈ ஆயின் தன் தவறுகளைப் புரிந்து, அவற்றுக்காக வருந்தி, மீண்டும் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்பைப் பெறல்.
- ஒரு குழந்தையின் பல்துறை சார்ந்த உரிமைகளைப் பேணுவதற்காக (தந்தை, வாரிசுச் சொத்து, மஹ்ரமி - அஜ்னபி தீர்மானித்தல்)
- உளத்தாக்கங்களில் இருந்து மீட்சி பெறுவதற்கான வழியாக அமைதல்

**(இவை போன்ற இரண்டு நோக்கங்கள் தரப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்)**


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**(ii) மரணித்த ஒருவரின் சொத்து அதன் வாரிசுதாரர்களான ஆண், பெண்ணுக்கிடையில் சமமாகப் பகிரப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக.**

**(04 புள்ளிகள்)**

- மரணித்தவருக்குப் பிள்ளைகள் இருப்பின் தாயும் தந்தையும் சமமாகப் பங்கு பெறுவர்.
  உதாரணம்: தாய் தந்தை 1/6 எஞ்சியவை மகன் 4/6
- ஒன்றுவிட்ட சகோதர, சகோதரிகள் சம அளவு பங்கையே பெறுவர்.
  உதாரணம்: கணவன் 1/2 தாய் 1/3 ஒன்றுவிட்ட சகோதரன் அல்லது சகோதரி 1/6
- ஒன்றுவிட்ட சகோதரிகள் ஒரு பங்கையும் உடன் பிறந்த சகோதரன் ஒரு பங்கையும் சமமாகப் பெற்றுக் கொள்வர்.
  உதாரணம்: தாய் 1/6, ஒன்றுவிட்ட சகோதரிகள், உடன் பிறந்த சகோதரன் 1/3, கணவன் 1/2
- மரணித்தவருக்கு ஒரு பெண் வாரிசு மாத்திரம் அல்லது ஓர் ஆண் வாரிசு மாத்திரம் இருப்பின் அனைத்துச் சொத்துக்களையும் அவ்வாரிசு பெற்றுக் கொள்வார்.
- துல் அர்ஹாமுக்கு மத்தியில் பெண்களும், ஆண்களும் சம அளவு பங்குகளையே பெற்றுக் கொள்வர்.

**(இவற்றுள் இரண்டு சந்தர்ப்பங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 2 x 2 = 4 புள்ளிகள்)**

**(iii) "தஸவ்வுப்" என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, அதன் தோற்றப் பின்னணியை விளக்குக.**

**(06 புள்ளிகள்)**

- **மொழியில்:** "தஸவ்வுப்" என்ற சொல் "ஸபா", "ஸுப்", "ஸப்", "அஸ்ஹாபுஸ் ஸுப்பா", "ஆலு ஸுப்பா" போன்ற சொற்களிலிருந்து தோன்றியது என்று குறிப்பிடுவர்.
- **பரிபாஷையில்:** "உள்ளத்தில் எழும் கீழான உணர்ச்சிகளுக்கெதிராகப் போராடி, அதனை இஸ்லாமிய பணியில் ஈடுபடும் வகையில் இறை நேசம், மறுமை வாழ்வில் பற்று, உலக வாழ்வைத் துச்சமாக மதிக்கும் மனநிலை ஆகிய பண்புகளை உள்ளத்தில் தோற்றுவிக்கும் வழிமுறை" தஸவ்வுப் எனப்படும்.
- "வணக்க வழிபாடுகள் மூலம் உள்ளத்தைப் பண்படுத்தி, பயிற்றுவித்து இறை சட்டங்களுக்கு அமைய மனித வாழ்வை அமைத்துக் கொள்வதற்கான ஓர் ஆன்மீக முயற்சி"
- பட்டம், பதவிகளில், சொத்து சுகங்களில் மக்கள் மூழ்கிக் காணப்பட்ட நிலையில், ஆன்மீக வறுமையை நீக்கும் வகையில் ஆன்மீக விழிப்புணர்வு என்ற சிந்தனையுடன் தஸவ்வுப் தோற்றம் பெற்றமை.
- இவை வணக்க அனுஷ்டான முறைகளில் ஸலபுஸ்ஸாலிஹீன்களது வழிமுறையைப் பின்பற்றி தோற்றம் பெற்ற ஒன்றாகும்.
- தஸவ்வுப் என்ற பெயரில் இல்லாவிட்டாலும் குறித்த நடவடிக்கைகள் மூலம் நபி (ஸல்), ஸஹாபாக்களின் காலத்தில் ஆன்மா போசிக்கப்பட்டமை.
- மக்காவில் தாருல் அர்க்கத்தில் இதனை நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்டு, மௌட்டிக சிந்தனையில் வாழ்ந்த மக்களை ஆன்மீகத் துறைக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து அவர்களை நெறிப்படுத்தியமை.
- நபியவர்களதும், ஸஹாபாக்கள் மற்றும் தாபிஈன்களது காலங்களிலேயே உலகப்பற்றற்ற வாழ்வை மேற்கொள்ள முயற்சித்தமை. உதாரணம்: அபூதர் அல்கிப்பாரி (ரழி), உஸ்மான் பின் மழ்ஊன் (ரழி).
- பின்னர் இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்), ராபியதுல் அதவியா, புழைல் இப்னு இயாழ்.
- பின்னர் இமாம் ஹஸனுல் பஸரியின் மாணவர்களில், மாலிக் பின் தீனார், ஹபீப் அல்அஜமி, அப்துல் வாஹித் இப்னு ஸைத் போன்ற அறிஞர்கள் இக்கலையை வளர்த்தனர்.
- ஹிஜ்ரி 02ஆம் நூற்றாண்டில் தனிக்கலையாக வளர்ச்சி கண்டது. இத்துறையில் ஈடுபடுவோர் "சூபிகள்" என அழைக்கப்பட்டனர்.

**(வரைவிலக்கணத்துக்கு 2 புள்ளிகளும் நான்கு கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 4 புள்ளிகளுமாக மொத்தம் 2 + 4 = 6 புள்ளிகள்)**

**iv) ஒரு முஸ்லிம் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது பேணவேண்டிய பண்பாட்டு விழுமியங்கள் நான்கினை விளக்குக. (08 புள்ளிகள்)**

- **உண்மை பேசுதல்:** உண்மை பேசும் வியாபாரியை "அத்-தாஜிரு அஸ்-ஸதூக்" என நபி(ஸல்) குறிப்பிட்டார்கள். "உண்மையும், நாணயமும் உள்ள வியாபாரி மறுமையில் நபிமார்களுடனும் நல்லடியார்களுடனும் ஷுஹதாக்களுடனும் இருப்பர்" (திர்மிதி).
- **நாணயம்:** "அவர்கள் எத்தகையவர்கள் என்றால் தமது வாக்குறுதிகளிலும் நம்பிக்கை நாணயத்திலும் பேணுதலுடன் நடந்து கொள்வார்கள்". (அல்-மு.ஃமினூன்: 08)
- **அந்-நஸீஹாவைப் பேணல்:** "மார்க்கம் என்பது நல்லுபதேசமாகும். அது அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும் அவனது வேதத்திற்காகவும் முஸ்லிம்களின் தலைவர்களுக்காகவும் முஸ்லிம் சமூகத்துக்காகவும் அமையும்". (முஸ்லிம்)
- **நேர்மையும் நீதமும்:** "அளவையிலும் நிறுவையிலும் நீதியைக் கடைப்பிடியுங்கள்" (அன்ஆம்: 152)
- **தாராளத் தன்மை:** "தாராளத்தன்மையோடு நடந்து கொள்ளும் ஓர் அடியான் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். அவன் விற்றாலும் வாங்கினாலும் உரிமையொன்று கேட்கப்பட்டாலும் அவற்றில் தாராளத் தன்மையோடு நடந்து கொள்கிறான்." (புஹாரி)
- **ஏனையவர்களது உரிமைகளைப் பேணல்:** "உங்களில் ஒருவர் தனது சகோதரனுக்கெதிராக வியாபாரம் செய்ய வேண்டாம். தனது சகோதரனின் திருமணப் பேச்சுக்கு எதிராக திருமணப் பேச்சில் ஈடுபட வேண்டாம்." (புஹாரி)
- **எல்லைப்படுத்தப்படாத தர்மம்:** "வியாபாரிகளே! நிச்சயமாக வணிகம் பொய்ச்சத்தியத்தையும் அத்துமீறல்களையும் கொண்டது. எனவே அவற்றிலிருந்து தூய்மை பெற தர்மம் செய்யுங்கள்". (அபூதாவுத்)

**(இவை போன்ற நான்கு கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 4 x 2 = 8 புள்ளிகள்)**
**(2 + 4 + 6 +8 = 20 புள்ளிகள்)**

**(i) அல் குர்ஆனை புரிந்துகொள்வதற்கு ஹதீஸ் துணைபுரியும் வழிமுறைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டை உதாரணங்களுடன் விளக்குக.**

- அல்-குர்ஆனின் முஜ்மலான சில போதனைகளின் விரிவான விளக்கத்தைப் புரிந்து கொள்ள (முபஸ்ஸல்) ஹதீஸ் தேவைப்படுகின்றது. உதாரணமாக:

  "தொழுகையை நிலைநிறுத்துங்கள். ஸகாத்தையும் கொடுத்து வாருங்கள்." (2:110)
  சுருக்கமாக அமைந்த இப்போதனையை நபி அவர்களின் பின்வரும் ஹதீஸ் விரிவுபடுத்துகின்றது.

  "எவ்வாறு நான் தொழக்கண்டீர்களோ அவ்வாறு நீங்களும் தொழுகையை நிலை நிறுத்துங்கள்." (புகாரி)
- அல்குர்ஆனின் சில போதனைகளை ஹதீஸ் மேலும் உறுதிப்படுத்துகின்றது. ஆயிஷா (ரழி) அவர்களிடம் நபி அவர்களின் வாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்தது
  "....அது அல்குர்ஆனாகவே இருந்தது" இக்கூற்றின் மூலம் நபி அவர்களின் வாழ்க்கை குர்ஆனைப் பிரதிபலித்தது என்ற கருத்தைப் புரிந்து கொள்ள வைக்கின்றது.
- அல்-குர்ஆன் சில விடயங்களைப் (அல்-ஆம்) பொதுவாகக் குறிப்பிட, ஹதீஸ் அதனை (ஃகாஸ்) சில குறிப்பிட்ட விடயத்தோடு தொடர்புபடுத்தி விளக்குகிறது.
  உதாரணமாக: சொத்துரிமையைப் பற்றிய பின்வரும் குர்ஆன் போதனைக்கு ஹதீஸின் விளக்கம் தேவைப்படுவதை அவதானிக்கலாம்.

  "உங்களில் இறந்த, அவருக்குச் சந்ததியுமிருந்து (பெற்றோருமிருந்தால்) தாய் தந்தை ஒவ்வொருவருக்கும் (இறந்தவர்) விட்டுச் சென்ற சொத்தில் ஆறிலொரு பாகமுண்டு.." (4:12)
- அல்-குர்ஆன் பொதுப்பிரமாணமாக (முத்லக்) விளக்க, ஹதீஸ் அதனோடு தொடர்புடைய வேறு விதிகள் மூலம் அப்பொது விதியை வரையறுத்து (முகய்யத்) விளக்குகிறது. "களவெடுத்தால் ஆண், பெண் ஆகிய இருவரது கரங்களையும் துண்டித்துவிடுங்கள்" (5:38)
  - இதிலிருந்து சித்தசுவாதீனமற்றோர், குழந்தைகள் விதிவிலக்கு அளிக்கப்படுகின்றனர்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- அல்-குர்ஆன் குறிப்பிடாத சில விடயங்களை ஹதீஸ் குறிப்பிடுகிறது.
  திருமணச் சட்டத்தில் மனைவியின் தாயின் சகோதரிகளை மணமுடிப்பது ஹறாம் என ஹதீஸ் குறிப்பிடுகின்றது.

**(மேலுள்ளவற்றுள் நான்கு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 4 புள்ளிகளும் அவற்றுள் இரண்டு விடயங்கள் விளக்கப்பட்டிருப்பின் 2 x 3 = 6 புள்ளிகளுமாக மொத்தம் 4 + 6 = 10 புள்ளிகள்)**

**(ii) தாபிஈன்கள் காலத்தில் ஹதீஸ் நூலுருப்படுத்தப்பட்ட வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு அதனால் முஸ்லிம் சமூகத்திற்குக் கிடைத்த அனுகூலங்கள் நான்கினை விளக்குக.**

- தாபிஈன்கள் காலம் ஹிஜ்ரி 100 இலிருந்து ஆரம்பமாகி, ஹிஜ்ரி 150 அல்லது ஹிஜ்ரி 200 வரையாகும்.
- தாபிஈன்கள் காலத்தின் ஆரம்பத்தில் ஹதீஸ்கள் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டமை.
- உமையாக்கள் வரிசையில் ஹிஜ்ரி 99ஆம் ஆண்டு உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஆட்சிபீடமேறியதன் பின்னர் அவர் ஹதீஸ் துறையைப் பாதுகாக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டமை.
- அவர், "ரஸூல் (ஸல்) அவர்களின் ஹதீஸையும் ஸுன்னாவையும் தேடிக்கண்டுபிடியுங்கள், ஏனெனில் நான் அறிவின் மறைவையும் அறிஞர்களின் பிரிவையும் அஞ்சுகிறேன்." என கவர்னருக்குக் கடிதம் எழுதியமை.
- ஒன்றுதிரட்டும் பணிக்கு "இமாம் ஷிஹாபுத்தீன் சுஹ்ரி" அவர்களை நியமித்தமை.
- தாபிஈன்கள் காலத்து அறிஞர்கள் சில பாதுகாப்பு முறைகளை அறிமுகம் செய்தமை.
  - இஸ்னாதைக் குறிக்கும் வழிமுறையை முதன் முதலில் நடைமுறைக்கு கொண்டு வந்தமை.
  - ஹதீஸ்களை அறிவித்தவர்கள் எவராவது உயிருடன் இருந்தால் நேரடியாகச் சந்தித்து உறுதிப்படுத்திக் கொண்டமை.
- தாபிஈன்கள் காலத்து அறிஞர்கள் தாம் திரட்டிக்கொண்ட ஹதீஸ்களை 'முஸ்னத்' அடிப்படையில் நூலுருப்படுத்தியமை.

**ஹதீஸ் துறைக்கு தாபிஈன்கள் வழங்கிய பங்களிப்பின் காரணமாக முஸ்லிம் சமூகம் அடைந்த பயன்கள்**

- முதன்முதலாக ஹதீஸ் கிரந்தம் கிடைத்தமை. உதாரணம்: முஅத்தா
- தாபிஈன்கள் காலத்தில் ஆரம்பத்தில் எதிர்கொண்ட பிரச்சினைகளிலிருந்து விடுதலை கிடைத்தமை.
- பகுத்தறிவை விடுத்து மார்க்கப் பிரச்சினைகள் அல்குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் தீர்க்கப்படல் வேண்டும் என்ற சிந்தனை வளர்ந்தமை.
- அடுத்து வரும் ஹதீஸ் துறை அறிஞர்களுக்கு ஹதீஸ் துறைக்கு இலகுவாக பங்காற்றுவதற்கு முன்மாதிரியாக அமைந்தமை.

**(வரலாற்றை சுருக்கமாக குறிப்பிட்டிருப்பின் 6 புள்ளிகளும் அனுகூலங்கள் 4 கினை விளக்கியிருப்பின் 4 புள்ளிகளுமாக மொத்தம் 6 + 4 = 10 புள்ளிகள்)**

**(10 + 10 = 20 புள்ளிகள்)**

**"ஷரீஆ மாறுபட்ட போதிலும் இஸ்லாம் என்றும் நிலையான தீனாகவே காணப்படுகின்றது" விளக்குக.**

- **ஷரீஆ** என்பது, "நம்பிக்கைக் கோட்பாடுகள், பண்பாடுகள், சட்டங்கள் உள்ளடங்கிய அல்லாஹ்வால் உலக மக்களுக்கு வகுக்கப்பட்ட சட்டங்கள் ஆகும்.
- **தீன்** என்பது மார்க்கத்தின் அடிப்படை விடயங்கள், நம்பிக்கைக் கோட்பாடுகள் என்பவற்றைக் கொண்டு நிலையானதாக, மாறாத்தன்மை கொண்டதாகக் காணப்பட்டது.
- ஆதம் (அலை) அவர்கள் முதல், நபி (ஸல்) அவர்கள் வரை அனுப்பப்பட்ட அனைத்து றஸூல்மார்களுக்கும் தீன் எனும் மார்க்கம் (கொள்கை) நிலையானதாகவும், ஷரீஆ எனும் சட்டம் வேறுபட்டதாகவும் அமைந்து காணப்பட்டது.

  "நாம் நூஹுக்கு உபதேசித்தவற்றையே உமக்கு மார்க்கமாக ஆக்கியுள்ளோம்." (42 :13)
- ஷரீஆ என்பது கால மாற்றத்திற்கு ஏற்ப மாற்றத்துக்கு உட்படக்கூடியது என்பதை பின்வரும் அல்-குர்ஆன் வசனம் உணர்த்துகிறது.

  "உங்களில் ஒவ்வொரு தூதருக்கும் தனித்தனியான ஷரீஆவையும், வழிகாட்டலையும் நாம் வழங்கியுள்ளோம்" (5 : 48)
- ஷரீஆ சட்டம் மாறுபட்டதாகவும், தீன் நிலையானதாகவும் இருப்பதற்கான காரணம் ~~அல்லாஹ்~~ காலம், இடம், சமூகங்களின் நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு வேறுபட்ட ஷரீஆ சட்டங்கள் அமைந்துள்ளமை.
- முழு சமூகத்தையும் ஒரு படிமுறை அணுகுமுறையின் கீழ் அழைத்துச் செல்வது அல்லாஹ்வின் நாட்டமாக இருக்கலாம்.
- ஒவ்வொரு சமூகமும் கொண்டுள்ள இயல்புகள், வழக்காறுகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு வேறுபட்ட ஷரீஆ சட்டங்களை அல்லாஹ் அமைத்தான்.

**(இவைபோன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

**கருத்து வேறுபாடுகளின் போது பேணவேண்டிய ஒழுங்குகள் ஐந்தை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் விளக்குக.**

- **கருத்தொற்றுமையான விடயங்களில் பரஸ்பரம் ஒத்துழைத்தல்.**
  "கருத்தொற்றுமையான விடயங்களில் நாம் பரஸ்பரம் ஒத்துழைத்துக்கொள்வோம். கருத்துவேறுபாடு கொண்ட அம்சங்களில் பரஸ்பரம் நியாயம் காண்போம்" இமாம் ரஷீத் ரிழா
- **கருத்து வேறுபாடான விடயங்களில் விட்டுக்கொடுத்தல்.**
  நபியவர்கள் கருத்துவேறுபட்ட விடயங்களை அங்கீகரித்துள்ளமை.
  "ஒருவர் இஜ்திஹாத் செய்து அது சரியாக அமைந்தால் அவருக்கு இரு கூலிகள் உண்டு. அது பிழையாக அமைந்தால் அவருக்கும் ஒரு கூலி உண்டு."
- **ஒருவரையொருவர் சாடாதிருத்தல், மதித்து நடத்தல்.**
  "நீங்கள் பனூ குறைழாவிலேயன்றி அஸர் தொழுகையை நிறைவேற்ற வேண்டாம்" என்ற ஹதீஸுடன் தொடர்பான சம்பவம்
- **ஒரு மத்ஹபின் அல்லது தனிமனிதனின் கருத்தில் பிடிவாதப் போக்கைக் கடைபிடிப்பதைத் தவிர்த்தல்.**
  "எனது கருத்து சரியானது, பிழையாகவும் இருக்கலாம். அடுத்தவர் கருத்து பிழையானது, சரியாகவும் இருக்கலாம்" - இமாம் ஷாபிஈ
- **அடுத்தவர் பற்றிய நல்லெண்ணத்தை வளர்த்துக்கொள்ளல்.**
  ஸலபுஸ் ஸாலிஹீன்களின் கருத்துப்படி, "ஈமானின் சிறந்த அடையாளம் அல்லாஹ்வைக் குறித்தும், மக்களைக் குறித்தும் நல்லெண்ணம் கொள்ளல். ஈமானின் மோசமான அடையாளம் அல்லாஹ்வைக் குறித்தும் மக்களைக் குறித்தும் கெட்ட எண்ணம் கொள்ளல்"
- **தர்க்கங்களை முடிந்த அளவு தவிர்த்துக்கொள்ளல்.**
  விவாதம் என்றாலே அங்கு மென்மையைக் கடைபிடிப்பது சிரமம். எனவேதான் அல்லாஹ், "அவர்களுடன் தர்க்கிக்க நேரிட்டால் சிறந்த முறையில் தர்க்கியுங்கள்" (16:125 )



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- **மார்க்கத்தை பின்பற்றுவதில் நடுநிலைப் போக்கைக் கடைபிடித்தல்.**
  நபி (ஸல்) அவர்கள் "தீவிர போக்கைக் கையாள்பவர்களுக்கு நாசம் உண்டாகட்டும்" என்று மூன்று முறை கூறினார்கள். (முஸ்லிம்)
  "மார்க்கத்தில் அளவு கடந்த போக்கை நான் உங்களுக்கு எச்சரிக்கிறேன். உங்களுக்கு முன் சென்ற சமூகம் அழிந்து போனதெல்லாம் மார்க்கத்தில் அளவு கடந்த போக்கை கடைபிடித்தமையாலாகும்" அஹ்மத்.
- **கலைச் சொற்களின் கருத்துக்களை அறிந்து பயன்படுத்தல்**
  உதாரணமாக: குப்ர், ஷிர்க், நிபாக், ஜாஹிலிய்யத் போன்ற சொற்களைப் பயன்படுத்தும் போது அவற்றின் அர்த்தங்களை அறிந்து பயன்படுத்த வேண்டும்.
- **இஜ்திஹாதுக்குரிய விடயங்களை அழுத்திச் சொல்வதைத் தவிர்த்தல்**
  இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் பக்தாதில் இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் சட்டத்தளத்திற்கு பக்கத்தில் இருந்த மஸ்ஜிதில் ஸுபஹ் தொழுகையை நிறைவேற்றும்போது குனூத்தும் ஓதவில்லை ருகுவிலிருந்து நிலைக்கு வரும் போது கைகளை உயர்த்தவும் இல்லை.

**(இவற்றுள் ஐந்து கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்**

(கலை போன்ற)

**(10 + 10 = 20 புள்ளிகள்**

6. (i) **ஒரு முஸ்லிமின் வீட்டுச் சூழல் சிறந்து விளங்க இஸ்லாம் குறிப்பிடும் போதனைகள் ஐந்தை விளக்குக.**

**(10 புள்ளிகள்**

(ii) **"குடும்ப வாழ்வில் கணவன், மனைவி எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் தீர்வுக்கு இஸ்லாம் சிறந்த ஒழுங்கு முறையொன்றை முன்வைத்துள்ளது" விளக்குக.**

**(10 புள்ளிகள்**

(i) **ஒரு முஸ்லிமின் வீட்டுச் சூழல் சிறந்து விளங்க இஸ்லாம் குறிப்பிடும் போதனைகள்**

- ஒரு முஸ்லிமின் வீடு வாழ்வின் இலக்கை அடையும் வகையில் அமைதல்.
- வீடு அமைதியளிக்கும் இடமாக இருத்தல்.
  "அல்லாஹ் உங்களுடைய வீடுகளை உங்களுக்கு அமைதியளிக்கும் இடமாக மாற்றினான்" (அந்நஹ்ல்: 80)
  "நான்கு விடயங்கள் அதிஷ்டத்தில் அடங்கக் கூடியவை. அவை நல்ல மனைவி, விசாலமான வீடு, நல்ல அயலான், சிறந்த வாகனம் என்பனவாகும்" (நஸாஈ)
- ஒரு வீடு அன்பு, பாசம், நிம்மதி, பாதுகாப்பு, சமாதானம் என்பவற்றின் உறைவிடமாக இருத்தல்
- நற்பண்புகள், நற்பணிகளின் அரணாக இருத்தல்.
- பௌதிக அமைவிடம் வீட்டில் உள்ள செயற்பாடுகளுக்கு இடையூறு இல்லாதவாறு இருத்தல்.
- இஸ்லாம் கூறும் பண்பாடுகளுக்கு அமைய வீட்டை அமைத்துக்கொள்ளல்
- வீட்டின் உட்புற, வெளிப்புறச் சூழலைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் அமைத்துக்கொள்ளல்.
  "உங்கள் வீட்டு முற்றங்களை சுத்தமாக வைத்திருங்கள்" (திர்மிதி)
- வீட்டின் அழகில், நேர்த்தியில் கவனமெடுத்தல்.
  "அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியுள்ள அழகையும், உணவு வகைகளில் தூய்மையானவற்றையும் தடுத்தது யார்?" (அல் : அஃ.ராப் : 32)
- வீட்டின் வெளிப்புறச் சூழலை பசுமையாகவும், அழகாகவும் வைத்திருத்தல்.
- வீட்டின் உட்புற அலங்காரங்கள், தளபாடங்கள் இஸ்லாமிய வரையறைகளுக்கு உற்பட்டதாக இருத்தல்
- ஈமானிய உணர்வு உள்ளவர்களாகவும் இஸ்லாமிய செயற்பாடு கொண்டவர்களாகவும் அங்கத்தவர்கள் வீட்டில் வாழுதல்.
- கடமைகள், உரிமைகள் பேணக்கூடியவர்களாக கணவன், மனைவி இருத்தல்.
- பெற்றோர்கள் சிறந்த பிரஜைகளை உருவாக்கும் தகுதியை பெறல்.

- பிள்ளைகள் பெற்றோருக்கு பணிந்து நடப்போராக இருத்தல்.
- உறவினர்களின் உரிமைகள் பேணப்படல்.
- அயலவரின் உரிமைகள் பேணப்படல்.
- விருந்தாளிகளை மதிக்கும் வீடாக இருத்தல்.
- வீட்டில் பணிபுரிவோரின் உரிமைகள், தேவைகள் மதிக்கப்படல்.
- ஒரு வீடு சிறந்த வீடாக அமைய அந்த வீட்டின் ஆன்மீக சூழல் சிறப்பாக இருத்தல்.
- ஐம்பெரும் கடமைகள் முறையாக நிறைவேற்றப்படல்.
- வீட்டில் ஸுன்னத்தான கடமைகள் நிறைவேற்றப்படல்.
- இறை சிந்தனையை ஏற்படுத்தும் விதத்திலான செயற்பாடுகள், இஸ்லாமிய வழிகாட்டல்கள் நடைபெறல்.

**(இவை போன்ற ஐந்து விடயங்கள் இஸ்லாமிய அடிப்படையில் விளக்கப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

**(ii) "குடும்ப வாழ்வில் கணவன், மனைவி எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் தீர்வுக்கு இஸ்லாம் சிறந்த ஒழுங்கு முறையொன்றை முன்வைத்துள்ளது" விளக்குக.**

**அந்த ஒழுங்குகளை பின்வருமாறு விளக்கலாம்.**

- குடும்ப வாழ்வில் கணவன் மனைவி எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள பின்வரும் வழிமுறைகளை கையாளுமாறு இஸ்லாம் உபதேசிக்கிறது:
- மனைவியின் நல்ல குனங்களை நினைத்து திருப்திப்படல்: அது முடியாத போது,
- **மனைவிக்கு உபதேசித்தல்:** "மனைவி (கணவனுக்கு) மாறு செய்வாள் என்று நீங்கள் அஞ்சினால் அவளுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள்"
- **படுக்கையிலிருந்து அப்புறப்படுத்தி வைத்தல்:** "(அவள் திருந்தாவிடில்) படுக்கையிலிருந்து அவளை அப்புறப்படுத்தி வையுங்கள்". (அல் குர்ஆன் 4: 34)
- **இலேசாக அடித்தல்:** "(அதிலும் அவள் திருந்தாவிடில்) அவளை (இலேசாக) அடியுங்கள்". (4: 34)
- **இரு குடும்பத்திலிருந்தும் முக்கியஸ்தர்கள் இருவரை நியமித்து சமரச முயற்சியில் ஈடுபடல்:** "(கணவன் மனைவியாகிய) இவர்களுக்குள் (பிணக்குண்டாகி) பிரிவினை ஏற்பட்டு விடுமோ என நீங்கள் அஞ்சினால் அவன் குடும்பத்தில் ஒருவரை மத்தியஸ்தராகவும், அவள் குடும்பத்தில் ஒருவரை மத்தியஸ்தராகவும் நீங்கள் ஏற்படுத்துங்கள். அவ்விருவரும் சமாதானத்தை உண்டுபண்ண விரும்பினால் அல்லாஹ் இருவரையும் ஒற்றுமையாக்கி விடுவான்" (4: 35)
- கணவனிடமிருந்து மனைவி பிரச்சினைகளை எதிர்கொண்டால் அதனைத் தீர்த்துக் கொள்ளவும் இஸ்லாம் வழிகாட்டுகின்றது.
- தத்தமது எதிர்பார்ப்புக்கள், கருத்து வேறுபாடுகள், விரும்பாத அம்சங்கள் போன்றவற்றை இருவரும் மனம் திறந்து பேசி, தெரியப்படுத்தி வாழ்வை நெறிப்படுத்திக்கொள்ள இஸ்லாம் வழிகாட்டுகிறது.
- இவ்வாறான நிலைமைகளில் கணவன், மனைவி வாழ்க்கைப் பிரச்சினைகளை சீர்செய்ய முடியாதவாறு விரிசல் நிலை அதிகரித்து விடுமானால் குடும்பமாக வாழ முடியாத நிலை ஏற்படலாம். அவ்வாறான நிலைமையில் இருவரும் விவாக பந்தத்திலிருந்து பிரிந்து விடுவதற்கும் இஸ்லாம் அனுமதிக்கின்றது.

  "(சுமுகமாக சேர்ந்து வாழ முடியாமல்) அவ்விருவரும் பிரிந்து விட்டாலோ அல்லாஹ் தன் (அருட்) கொடையைக் கொண்டு (அவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு) முற்றிலும் தேவையற்றவராக ஆக்கி விடுவான். (கொடையளிப்பதில்) அல்லாஹ் விசாலமானவனும் ஞானமுடையவனுமாக இருக்கின்றான்." (4: 130)
- "அல்லாஹ் அனுமதித்தவற்றுள் அவனுக்கு மிகவும் வெறுப்பானது தலாக் ஆகும்." (அபூ தாவூத்)

**(இவை போன்ற ஐந்து விடயங்கள் ஒழுங்குமுறையில் விளக்கப்பட்டிருப்பின் *5 x 2 = 10* புள்ளிகள்)**
**(*10 + 10 = 20* புள்ளிகள்)**



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

7. (i) ஜாஹிலிய்யா கால சமூகத்தினரிடையே காணப்பட்ட தவறான நடத்தைகள் ஐந்தைக் குறிப்பிட்டு, அவற்றிலிருந்து அச்சமூகத்தை இஸ்லாம் மீட்டெடுத்த விதம் பற்றி ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பம்சங்கள் ஐந்தை விளக்குக.

(10 புள்ளிகள்)

**(i) ஜாஹிலிய்யா கால சமூகத்தினரிடையே காணப்பட்ட தவறான நடத்தைகள்**

- மது அருந்துதல்
- கொள்ளையடித்தல்
- விபச்சாரம்
- பெண்ணுரிமை மறுக்கப்படல்
- அற்ப விடயங்களுக்காக யுத்தம் செய்தல்
- பிறரின் சொத்துக்களை அபகரித்தல்
- களவெடுத்தல்
- சூதாடல்
- வட்டித் தொழில்
- பெண் குழந்தைகள் உயிருடன்புதைக்கப்படல்
- வலியோர் எளியோரை அடிமைப்படுத்தல்
- பிழையான திருமண நடைமுறைகள்

**தவறான நடத்தைகளில் இருந்து ஜாஹிலிய்யா சமூகத்தைஇஸ்லாம் மீட்டெடுத்த விதம்:**

- தௌஹீதை மக்களின் உள்ளத்தில் பதித்தல்.
- இறையச்சத்தை ஏற்படுத்தல், அதனை வளர்த்தல்.
- விபச்சாரத்தை ஹராமாக்கி திருமணத்தை ஹலாலாக்கியமை மற்றும் பலதார மணத்தை அனுமதித்தமை
- பெண்களை கண்ணியப்படுத்தி அவர்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுத்தல்.
- வாரிசுரிமைச் சட்டத்தை அறிமுகம் செய்து, பெண்களுக்கும் சொத்துரிமையைப் பெற்றுக்கொடுத்தமை
- மதுசாரத்தை படிப்படியாக ஒழித்து அது தொடர்பான செயற்பாடுகளை முற்றாக தடுத்தமை.
- சூதாட்டம், வட்டி போன்றவற்றை ஹராமாக்கி வியாபாரத்தை ஹலாலாக்கியமை.
- ஸகாத், ஸதகா, ஹிபத், வக்பு போன்றவைகள் மூலாம் சொத்துக்களை பலரது கைகளிலும் சுழலவைத்து வறுமையை நீக்கியமை.
- அல்லாஹ்வுக்கு மாத்திரமே அடிமையாக இருக்க வேண்டும் என பணித்ததன் மூலம் மக்கள் மக்களை அடிமைப்படுத்துவதில் இருந்து பாதுகாத்தமை.
- மறுமை பற்றிய அச்சத்தை ஏற்படுத்தி பாவங்களில் இருந்து மக்களை பாதுகாத்தமை.

**(தவறான நடத்தைகள் ஐந்தைக் குறிப்பிட்டு இஸ்லாம் அவற்றிலிருந்து மீட்டெடுத்த விதத்தினை விளக்கியிருப்பின் 2 x 5 = 10 புள்ளிகள்)**

**(ii) இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பம்சங்கள்**

- இஸ்லாமிய சமூக அமைப்பு அல்லாஹ்வினாலும் அவனது தூதரின் வழிகாட்டலினாலும் கட்டியெழுப்பப்பட்டுள்ளமை.
- சமத்துவமும் சகோதரத்துவமும் காணப்படக்கூடிய சமூகம்.
- கூட்டுப் பொறுப்பு காணப்படல்
- எதையும் சமூகப்பார்வையில் நோக்கும் தன்மை கொண்டது.
- இஸ்லாத்தின் போதனைகள் தனிநபர்களை மாத்திரம் நோக்காது சமூகத்தையும் சேர்த்து நோக்குகின்றமை
- அகீதாவை அடிப்படையாகக் கொண்ட சமூகம்
- ஷூரா என்ற கலந்தாலோசித்தல் மூலம் செயற்படும் சமூகம்
- த.்.வா சமூகமாக காணப்படுகின்றமை
- நடுநிலையான சமூகம்
- இலட்சிய சிந்தனை கொண்ட சமூகம்

- அல்குர்ஆனிய சமூகம்
- சர்வதேச சமூகம்
- சிறந்த பாரம்பரியத்தை கொண்டிருத்தல்

**(இவை போன்ற ஐந்து விடயங்கள் விளக்கப்பட்டிருப்பின் $5 \times 2 = 10$ புள்ளிகள்)**

**($10 + 10 = 20$ புள்ளிகள்)**

5 Points – 5 marks.

**8. பின்வரும் தலைப்புகள் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.**

(i) இஜ்மாஉ ஸரீஹ்
(ii) இஸ்லாத்தில் உழைப்பின் முக்கியத்துவம்
(iii) இலங்கை முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டுப் பங்களிப்புகள்
(iv) இஸ்லாம் மனிதனுக்கு வழங்கியுள்ள உயர் அந்தஸ்து.

**(i) இஜ்மாஉ ஸரீஹ்**

- சமகாலத்தில் வாழ்கின்ற முஜ்தஹித்கள் ஒவ்வொருவரும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சட்டப் பிரச்சினை தொடர்பாக தமது கருத்தையும் நிலைப்பாட்டையும் தெளிவாக முன்வைப்பதன் மூலம் ஒருமைப்பட்ட முடிவொன்றுக்கு வருவதையே "இஜ்மாஉ ஸரீஹ்" எனப்படும்.
- இது முதல் தர இஜ்மாவாகக் கொள்ளப்படுகிறது.
- இஜ்மாஉ ஸரீஹ் என்பதன் கருத்து தெளிவான இஜ்மாஉ என்பதாகும்.
- இந்த இஜ்மாஉ திட்டவட்டமானதாக, சந்தேகத்துக்கிடமற்றதாக, ஆதாரப்பூர்வமானதாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
- இதனை சட்ட அறிஞர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வர்.
- இதற்கு உதாரணமாக:

(1) நபி (ஸல்) அவர்களுக்குப் பின் இஸ்லாமிய அரசின் தலைவராக அபூபக்கர் (ரழி) தெரிவு செய்யப்பட்டமை.
(2) உமர் (ரழி) ஆட்சியில் கால்நடைகளில் குதிரைக்கு ஸகாத் வாஜிபாகும் என தீர்மானிக்கப்பட்டமை.

**(இவை போன்ற ஐந்து விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் $1 \times 5 = 5$ புள்ளிகள்)**

**(ii) இஸ்லாத்தில் உழைப்பின் முக்கியத்துவம்**

- அல்குர்ஆன், ஸுன்னா உழைப்பை தூண்டியுள்ளமை.

  "அவன் உங்களுக்கு பூமியை வசதியாக ஆக்கி வைத்தான். எனவே அதன் பல கோணங்களிலும் சென்று அவன் உங்களுக்கு அளித்திருப்பவைகளை புசிப்பீர்களாக" (அல்குர்ஆன்)

- ஸுன்னாவில்

  "உண்மையும், நேர்மையும் உள்ள வியாபாரி மறுமையில் நபிமார்களுடனும் உண்மையாளர்களுடனும், ஷுஹதாக்களுடனும் இருப்பார்." (திர்மிதி)

  "ஒருவன் சுயதொழில் மூலம் பெற்ற வருமானத்தைக் கொண்டு உட்கொள்ளும் உணவை விட வேறு சிறந்த உணவை உட்கொள்வதில்லை" (புஹாரி)

- நபிமார்கள் உழைப்பில் ஈடுபட்டமை
- உழைப்பு இபாதாவாக ஆக்கப்பட்டுள்ளமை
- உழைக்க சக்தியுள்ளவர் உழைக்காமல் இருப்பது கண்டிக்கப்பட்டுள்ளமை.
- தவறான தவக்குலை இஸ்லாம் ஏற்காமை



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- அல்லாஹ் உத்தரவாதப்படுத்திய ரிஸ்கை முயற்சி செய்து, உழைத்துப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- உழைப்பாளியை அல்குர்ஆன் முஜாஹிதுகளுடன் இணைத்துக் குறிப்பிடுகின்றமை.
  (ஸூரா முஸ்ஸம்மில் : 20)

(இவை போன்ற ஐந்து விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)

**(iii) இலங்கை முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டுப் பங்களிப்புகள்**

கலாசாரப் பண்பாட்டுப் பங்களிப்பு

- இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்களால் இந்நாட்டுக்கு பல்வேறு கலாசார பங்களிப்புகள் வழங்கப்பட்டுள்ளமை.
  - குத்தாப்களின் தோற்றம்: குத்தாப், மத்ரஸாக்கள், மற்றும் மாலை நேர மத்ரஸாக்களின் தோற்றம்.
  - கட்டடக்கலை பாரம்பரியம் அறிமுகம்
    - கட்டடக்கலையில் மஸ்ஜித்களின் அமைப்பு முக்கியமானது.
    - குப்பா, மினாரா, மிம்பர், மிஹ்ராப், மி.்.தனா, ஹவ்ழ், உள் பள்ளி, வெளிப்பள்ளி போன்றன முக்கியம் பெறுகின்றன.
  - மஸ்ஜித்கள் தவிர்ந்த கட்டிடங்கள்
    - ஸாவியா - தக்கியா - தர்ஹா போன்றன தோற்றம் பெறல்
  - ஸூபிகளின் செல்வாக்கு
    - ஆன்மீக நடவடிக்கைகளான ஹத்தாத் ராதிப், ஸலாதுந்நாரியா, மீலாத் நிகழ்வுகள் போன்றன.
  - அறபுத்தமிழ் என்ற மொழி மரபு முஸ்லிம்கள் மத்தியில் பரவலாகக் காணப்பட்டமை.
  - முஸ்லிம்களுக்கென ஆடைக் கலாசாரம் வளர்ச்சி கண்டமை, தொப்பி, ஜூப்பா, அபாயா போன்றன.
  - முஸ்லிம்களுக்குரிய தனியான உணவுக் கலாசாரம் வளர்ச்சி கண்டமை, வட்டிலாப்பம், புரியாணி, நோம்புக்கஞ்சி போன்றன.

(இவை போன்ற ஐந்து விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)

**(iv) இஸ்லாம் மனிதனுக்கு வழங்கியுள்ள உயர் அந்தஸ்து**

- படைப்புகளில் உயர்ந்தவனாக மனிதன் ஆக்கப்பட்டுள்ளமை.
- அல்லாஹ்வினால் அறிவூட்டப்பட்டே மனிதன் உலகுக்கு அனுப்பப்பட்டுள்ளமை.
- எல்லாப் பொருட்களையும் மனிதனுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளமை.
- ஏனைய படைப்புகளிலிலிருந்து வேறுபடும் வகையில் உடல், அறிவு, ஆன்மா என்பவை வழங்கப்பட்டுள்ளமை.
- அல்லாஹ்வின் பிரதிநிதியாக மனிதன் ஆக்கப்பட்டுள்ளமை.
- அல்லாஹ் மலக்குகளை மனிதனுக்கு ஸுஜூத் செய்யுமாறு பணித்தமை.
- மனிதனை அழகான தோற்றத்தில் படைத்துள்ளமை.
- மனிதனுக்கு இபாதத், இமாரத், கிலாபத் ஆகிய முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளமை.

**(இவை போன்ற ஐந்து விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**